# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் செய்யூர்

## அசல் வழக்கு எண்.78/2022

## PW2

| | | |
|---|---|---|
| பெயர். திரு.மாணிக்கம் | த/பெ.திரு.குமாரசாமி | நாள்.12.08.2026 |

வா.சா.2 அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

நான் ஆவணத்தின் அடிப்படையில் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் சாட்சி சொல்கிறேனா என்றால் அனுபவத்தின் அடிப்படையில் சாட்சியம் சொல்கிறேன், ஆவணத்தை பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தின் கிழக்கே ரோடு உள்ளதா என்றால் உள்ளது. தாவா சொத்திற்கு மேற்கில் பிரதிவாதி துரை வீடு உள்ளது என்றால் சரிதான். வடக்கில் ரோடு உள்ளதா என்றால் இல்லை. வடக்கில் முத்துக்குமாரசாமியின் காலி மனை உள்ளது. தெற்கில் ரோடு உள்ளதா என்றால் ரோடு உள்ளது. அது சிமெண்ட் ரோடு என்றால் சரிதான்.

2. 2010 – 2015 ல் ஜெயபால் என்பவர் தலைவராக இருந்தபோது மேற்படி சிமெண்ட் ரோடு போடப்பட்டது என்றால் சரிதான். அந்த சிமெண்ட் ரோடு போடுவதற்கு முன்பே சர்வே எண்.782/7 மற்றும் 9 ல் காம்பவுண்ட் சுவர் அமைத்து வீடு கட்டி தென்னை மரம் வளர்த்து வாதி அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். காம்பவுண்ட் சுவர் போடுவதற்கு முன்பு வாதி பி.டி.ஓ.வுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் காம்பவுண்ட் சுவர் கட்டப்பட்டது என்றால் சரிதான்.

3. வழக்கு சொத்துக்கு மேற்கு திசையில் பிரதிவாதி துரைராஜ் இருக்கிறார் அந்தசொத்துக்கும், வழக்கு சொத்துக்கும் எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். ரோடு பிரச்சனை தான் உள்ளது என்றால்

சரிதான். ஏற்கனவே சிமெண்ட் ரோடு பிரச்சனை இன்னும் உள்ளதா என்றால் இல்லை. வழக்கு சொத்தின் சர்வே எண்.782/7 – 30 செண்டும், 782/9 – 12 செண்டும் உள்ளதா என்றால் சரிதான், பிறகு 19 செண்ட் உள்ளது என்று கூறினார்.

4. எந்த ஆவணத்தின் அடிப்படையில் சர்வே எண்.782/9ல் 19 செண்ட் உள்ளது என்பதை சொல்கிறேன் என்றால் பட்டாவின் அடிப்படையில் சொல்கிறேன். அந்த பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் சற்குணமேரியின் மகள் ஜாய்ஸ் கிறிஸ்டின் 2வது வாதியின் பெயரில் உள்ளது. மேற்படி முதல் பிரதிவாதி ராஜி என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் முதல் பிரதிவாதி தாவா சொத்தில் லேஅவுட் செய்துள்ளார் என்பது பற்றி சொல்லியுள்ளேனா என்றால் அவர் பெயரில் கிரையப்பத்திரம் ஏதேனும் பார்த்தேனா என்றால் இல்லை.

5. மேற்படி விவரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் நான் அந்த ஊரில் வசிக்கிறேன் அவர் வரும்போதும், போகும்போதும் பார்த்து இருக்கிறேன் அதனடிப்படையில் சொல்கிறேன். வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் மேற்படி சிமெண்ட் ரோடு அகலம் குறித்து பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். எவ்வளவு அகலம் பிரச்சனை என்றால் ரோடின் அகலம் 8 அல்லது 9அடி இருந்தது, சிமெண்ட் ரோடு போடும்போது அகலமாக 2010 – 2015 இருந்தது. எவ்வளவு அகலம் என்று எனக்கு தெரியாது.

6. சிமெண்ட் ரோடு போடும்போது புகார் கொடுத்தார்களா என்றால் இல்லை. ரோடு பிரச்சனை நடக்கும்போது வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கு

இடையே நடந்த வாக்குவாதத்தின் போது நான் நேரிடையாக பார்த்தேனா என்றால் இல்லை. மேற்படி பிரச்சனை பற்றி யார் சொல்லி எனக்கு தெரியும் என்றால் யாரும் சொல்லவில்லை. வழக்கு சொத்தில் கிழக்கில் என்னுடைய வீடு உள்ளது என்றால் சரிதான், சர்வே எண்.782/5. என்னுடைய வீடு நான் எப்போது கிரையம் வாங்கினேன் என்றால் 20 ஆண்டுகளுக்கு மேல் ஆனது. வாதிகளிடமிருந்து மேற்படி வீடு கிரையம் வாங்கினேனா என்றால் இல்லை.

7. மேற்படி வீடு கிரையம் வாங்கி கொடுத்தது ராஜி என்றால் இல்லை. எனக்கும், பிரதிவாதிகளுக்கும் முன்விரோதம் உள்ளது என்றால் சரிதான். அந்த முன்விரோதத்தின் காரணமாக பிரதிவாதிகளுக்கு எதிராக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.

மறுவிசாரணை, இல்லை.

Taken down by me in open read over to the witness and acknowledged by him/her to be correct.

**Sd/-Tmt.C.M.Amaravathi**
DM Cum JM
Cheyyur